

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 202 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – மாசி 20 – புதன்கிழமை 04 மார்ச் 2026 – கோவை ★★ 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 202: Thiruvalluvar Year - 2057 - Maasi 20 - Wednesday 04 March 2026 - Kovai ★★ 16 Pages ₹ 5.00


## ஆட்சிக்கு ஆதரவான அலை வீசுகிறது!

# மீண்டும் ‘திராவிட மாடல்’ ஆட்சியே அமையும்!

## ‘தி வீக்’ ஆங்கில வார இதழ் நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, மார்ச் 4 -**

**“ஆட்சிக்கு ஆதரவான அலை வீசுகிறது; மீண்டும் ‘திராவிட மாடல்’ ஆட்சியே அமையும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘தி வீக்’ ஆங்கில வார இதழ் நடத்திய நிகழ்ச்சியில் உரையாற்றும் போது உறுதிபடக் கூறினார்.**

**முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.3.2026) சென்னையில் THE WEEK ஆங்கில வார இதழ் சார்பில் நடைபெற்ற “TAMIL NADU LEADERSHIP SUMMIT” நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, ஆற்றிய உரை வருமாறு :-**

‘தி வீக்’ இதழின் “தமிழ்நாடு லீடர்-ஷிப் உச்சி மாநாடு” நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான காலை வணக்கம்.

தென்னிந்தியாவின் முன்னணி இதழாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய ‘THE WEEK’ நடத்தும், “TAMIL NADU LEADERSHIP SUMMIT 2026” நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தொடக்கவுரை ஆற்றுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். திராவிட குடும்பத்தைச் சேர்ந்த, நம் சகோதர மாநிலமான கேரளத்தின் முன்னணி ஊடக குழுமமான மனோரமா குழுமத்தை தமிழ்நாட்டிற்கு நான் மனதார வரவேற்கிறேன்.

தமிழ்நாட்டில் நம்முடைய ‘திராவிட மாடல்’ அரசு செய்திருக்கும் சாதனை களையும், நிறைவேற்றியிருக்கும் திட்டங்களையும், இந்திய அளவில் எல்லோருக்கும் கொண்டுசென்று சேர்ப்பதற்கான ஒரு மேடையை அமைத்து தந்ததற்காக முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### எல்லா துறைகளிலும் ‘ஆல்ரவுண்டர்’

தமிழ்நாட்டிற்கான என்னுடைய கனவு என்பது, தனிப்பட்ட ஸ்டாலினின் கனவு மட்டுமல்ல; ஒட்டுமொத்த தமிழினத்தின் எதிர்பார்ப்புகளை உள்ளடக்கியதுதான் என்னுடைய கனவு! நூற்றாண்டுக்கு முன்பு திராவிட இயக்கம் தொடங்கப்பட்டதிலிருந்து, தமிழர்கள் காணத் தொடங்கிய கனவு! அதை நோக்கிய எங்களின் பயணத்தில் கடந்த 5 ஆண்டுகள் என்பது பெரும் பாய்ச்சலை கண்டிருக்கிறது. எல்லா துறைகளிலும் ‘ஆல்-ரவுண்டராக’ உயர்ந்து இருக்கிறோம். எல்லா பகுதிகளிலும் பரவலான, சமச்சீரான எல்லோருக்குமான வளர்ச்சியை எங்கள் திராவிடமாடல் ஆட்சியில் சாதித்து காட்டியிருக்கிறோம்!




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.3.2026) சென்னையில் THE WEEK ஆங்கில வார இதழ் சார்பில் நடைபெற்ற “TAMIL NADU LEADERSHIP SUMMIT” நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் தா.மோ. அன்பரசன், முன்னாள் ஒன்றிய அமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர் ப. சிதம்பரம், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் இ. பரந்தாமன், ‘தி வீக்’ இதழின் இயக்குநர் ரியாத் மேத்யூ, தலைமை நிலைய ஆசிரியர் ஹர்சா மேத்யூ, முதன்மை செய்தி ஆசிரியர் ஸ்டான்லி தாமஸ், தலைமை நிலைய செய்தியாளர் திருமதி லட்சுமி சுப்ரமணியன், பொருளாதார ஆலோசனைக் குழு உறுப்பினர் அரவிந்த் சுப்பிரமணியன், பல்வேறு தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள், பொருளாதார வல்லுநர்கள் மற்றும் பத்திரிகைத் துறையைச் சார்ந்த பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு வரும் தங்களின் பகுதியில், தங்களின் வீட்டில் எந்த அளவிற்கு முன்னேற்றம் வந்திருக்கிறது என்று கண்கூடாக பார்க்கிறார்கள். அதனால் தான், ஆட்சிக்கு ஆதரவான அலை வீசுகிறது.

தொடர்ந்து நீங்கள் எங்களின் திட்டங்களையெல்லாம் பார்த்துக்கொண்டு இருப்பீர்கள். அரசுப் பள்ளி மாணவர்களை உலக அளவில் முன்னணி உயர்கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பும் மாடல் ஸ்கூல்ஸ், விமான நிலையத்திற்கு இணையான பேருந்து நிலையங்கள், உயர்சிறப்பு மருத்துவமனைகள், சிறு விளையாட்டரங்கங்கள், ஏழைகளுக்கு தரமான குடியிருப்புகள் இப்படி ஒவ்வொரு ‘செக்டாரிலும்’ நாங்கள் சாதனை படைத்துக் கொண்டிருக்கிறோம்.

தொழில் வளர்ச்சியை எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டிலுள்ள எல்லா வட்டாரத்திலும் புதிய தொழில் முதலீடுகள் மூலமாக முன்னணி நிறுவனங்களின் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு வேலைவாய்ப்புகள் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாடு வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு வீட்டுமனை பட்டாக்களை மக்களுக்கு வழங்கியிருக்கிறோம்.

### ஐ.நா.அமைப்பு எங்களுக்கு பாராட்டு!

மருத்துவத் துறையை எடுத்துக்கொண்டால், மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48, நலம் காக்கும் ஸ்டாலின், இலவச கருப்பைவாய் புற்றுநோய் தடுப்பூசி என்று எங்களின் திட்டங்களை இங்கு இருக்கும் மருத்துவர்கள் தொடங்கி, ஐ.நா. அமைப்பு வரை எல்லோரும் பாராட்டுகிறார்கள்.

கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மூலமாக 75 இலட்சம் வீட்டிணைப்புகள் வழங்கப்பட்டு 3 கோடி மக்கள் பயன்பெற்றிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் பெரிய பெரிய மேம்பாலங்கள், பல்வேறு நகரங்களை இணைக்கும் நெடுஞ்சாலைகள் போடப்பட்டிருக்கிறது. கிராமச் சாலைகளையும் மேம்படுத்தி இருக்கிறோம். பெருநகரங்களுக்கு நடுவே அழகிய பூங்காக்களை அமைக்கிறோம். அறிவுக் கோயில்களாக பிரமாண்ட நூலகங்கள் கட்டப்படுகின்றன!

தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் டைடல் பார்க் இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், இரண்டாம் நிலை மாநகரங்களில் கூட ‘நியோ டைடல் பார்க்’, ‘எல்காட்’ போன்றவை அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு அடுத்து ஒரு பெரிய ‘ஃபின்-டெக்’ சிட்டியை திறந்து வைக்க போகிறேன். அடுத்து, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புதிய வீடுகளை பயனாளிகளுக்கு நான் ஒப்படைக்க இருக்கிறேன்.

### உழவர்களுக்கு தனி பட்ஜெட் – விளைச்சலில் சாதனை!

வேளாண்மைத் துறையை எடுத்துக் கொண்டால் உழவர்களுக்கு தனி பட்ஜெட் போட்டு, விளைச்சலில் சாதனை படைத்திருக்கிறோம்.

காலநிலை மாற்றத்தை மனதில் வைத்து Advance-ஆக செயல்படுவதிலும் தமிழ்நாடு தான் இன்றைக்கு முன்னோடியாக இருக்கிறது. துறையின் பெயர் மாற்றம் தொடங்கி, காலநிலை மாற்ற இயக்கம், நிர்வாக குழு, காலநிலை மாற்ற உச்சிமாநாடுகள் என கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம். மாசில்லாத போக்குவரத்திற்காக மாநிலம் முழுவதும் E-Bus பயன்பாட்டை அதிகரித்துக் கொண்டிருக்கிறோம்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

---

## தமிழ்நாட்டில் பா.ஜ.க. ஆட்சி என்ற

# பிரதமரின் கனவு பலிக்காது!

## ‘தி வீக்’ நடத்திய நிகழ்ச்சியில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்த பேட்டியில் திட்டவட்டம்!

**சென்னை, மார்ச் 4 -**

**“தமிழ்நாட்டில் பா.ஜ.க. ஆட்சி என்ற பிரதமரின் கனவு பலிக்காது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘தி வீக்’ ஆங்கில வார இதழ் நடத்திய நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றிய பின் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.**

### இன்னும் கட்சிகள் இணைய இருக்கிறது!

THE WEEK ஆங்கில வார இதழ் சார்பில் நடைபெற்ற “TAMIL NADU LEADERSHIP SUMMIT” நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த பேட்டி வருமாறு:-

**செய்தியாளர் -** உங்கள் தலைமையில் ஒரு மெகா கூட்டணியை கட்டி அமைத்திருக்கிறீர்கள். உங்களை விமர்சித்தவர்கள், உங்களை எதிர்த்து நின்றவர்கள் அனைவரும் உங்கள் கூட்டணிக்கு உங்கள் தலைமையின் கீழ் வந்திருக்கிறார்கள். இப்படி எல்லோரையும் கட்டி அரவணைத்து கொண்டு வருவது என்பது ஒரு பெரிய சவாலாக இருந்திருக்கும். இந்த சவாலை எப்படி தொடர்ந்து சமாளிக்கப்போகிறீர்கள்?

### எண்ணிக்கையில் அமையப்பெற்ற கூட்டணி அல்ல; எண்ணத்தால் உருவாக்கப்பட்டிருக்கும் கூட்டணி!

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் -** இது எண்ணிக்கையில் அமையப் பெற்ற கூட்டணி அல்ல. எண்ணத்தால் உருவாக்கப்பட்டிருக்கும் கூட்டணி. தமிழ்நாட்டில் இந்த கூட்டணி தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல், சட்டமன்றத் தேர்தல், உள்ளாட்சித் தேர்தலில் தொடர்ந்துகொண்டிருக்கிறது. இப்போது அமைய இருக்கும் இந்தக் கூட்டணியிலும் இந்த தேர்தலிலும் இன்னும் பல கட்சிகள் இணைந்திருக்கின்றன. இன்னும் இணைய இருக்கிறது. அதனால், இதை நான் சவாலாக கருதவில்லை. இதை கொள்கைக் கூட்டணியாக நாங்கள் கொண்டு செல்கிறோம்.

**செய்தியாளர் -** நேற்று நம்முடைய பிரதமர் மதுரையில் பேசும் போது தி.மு.க. மீண்டும் ஆட்சி அமைப்பது ஒரு கானல் நீராக இருக்கும் என்று சொல்லியிருந்தார்கள்?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் -** மோடியைப் பொறுத்தவரை சொல்லவேண்டுமென்றால், ஏற்கெனவே தமிழ்நாட்டில் பா.ஜ.க. ஆட்சி அமைக்க வேண்டும் என்று தான் கனவு கண்டுகொண்டிருக்கிறார்கள். அதுதான் கானல் நீராக சென்றுகொண்டே இருக்கிறதே தவிர, அவர் சொல்வது போன்று இல்லை.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.3.2026) சென்னையில் THE WEEK ஆங்கில வார இதழ் சார்பில் நடைபெற்ற “TAMIL NADU LEADERSHIP SUMMIT” நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, கேள்விகளுக்கு பதில் அளித்தார்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.